பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஹு ஆவணி மீ 24 உ ஞாயிற்றுக்கிழமை (09 09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 19 கதிர்: 190

## தீவுப்பகுதியில் பட்டினி நிலை!

### 3வாரங்களாக விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம், செப். 9
தீவுப்பகுதியில் பெரும் பசி, பட்டினி நிலை ஏற்பட்டிருக்கிறது.

இராணுவ நடவடிக்கைகளின் போது அங்கிருந்த உணவு சேமிப்புகள் நாசமாக்கப்பட்டதாலும், கடந்த மூன்று வார காலமாக உணவுப்பொருள்கள் ஏதும் அனுப்பப்படாததாலுமே இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஊர்காவற்றுறை. வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 80 ஆயிரம் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்ச

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நடமாடத் தடை

யாழ்ப்பாணம், செப். 9
அல்லைப்பிட்டி இராணுவ முகாமில் இருந்து ஒரு மைல் தூரத்துக்குள் மக்கள் நடமாடக்கூடாது என்று படையினர் உத்தரவிட்டுள்ளனர். (இ-7-3)

## யாழ். வந்த சுவிஸ் பிரதிநிதி

யாழ்ப்பாணம், செப். 9
சுவிஸ் மனித உரிமைகள் அமைப்பு ஒன்றைச்சேர்ந்த பிரதிநிதி திரு: எரிக் ஸ்மித் என்பவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து திரும்பினார்:

யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த வீடுகள், மற்றும் கட்டடங்களை அவர் நேற்றுக் காலை வீடியோப் படம் எடுத்தார். அவர் பொதுமக்கள் பலரையும் சந்தித்து நிலைமைகளையும் கேட்டறிந்து கொண்டார். (உ-5-3)

## ஷெல் வெடித்து 3|சிறுவர்கள் பலி

யாழ்ப்பாணம், செப். 9
மட்டக்களப்பு, உன்னிச்சைப் பகுதியில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட 60 எம். எம்|. மோட்டார் ஷெல் ஒன்று வெடிக்காமல் கிடந்தது.

கடந்த புதன்கிழமை இந்த ஷெல்லை எடுத்து விளையாடிக்கொண்டிருந்த மூன்று சிறுவர்கள், அது வெடித்துச் சிதறியதில் பலியானார்கள். (ஒ)

## வயாவிளானில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 9
நேற்றுக் காலை 6.15 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து வயாவிளான் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட தாக்குதலில் ஜெயா (ம.ரவி — வன்னேரி, கிளிநொச்சி) என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி வீரமரணமடைந்தார்: (உ)

## கிராண்பாஸில் இரு தமிழர் கைதாகினர்

கொழும்பு, செப். 9
கொழும்பு, கிராண்பாஸில் கடந்த வார இறுதியில் இரு தமிழர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த இருவரும் இப் பகுதி சலூன் ஒன்றில் தொழில் புரிந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## ஆஸ்பத்திரி இப்போதைக்கு இடம் மாறாது

யாழ்ப்பாணம், செப். 9
இப்போது மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையை யாழ். நகருக்கு (பழையஇடத்திற்கு) மாற்றுவது தற்போது சாத்தியப்படாது.

நேற்று மானிப்பாய் ஆஸ்பத்திரியில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் மேற்கண்ட கருத்துப் பரவலாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப ஆஸ்பத்திரி வளவில் அமைந்திருக்கும் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் பிரஸ்தாப கலந்துரையாடல் நடைபெற்றது.

நிலைமை சீரடைந்த பின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விறகிலிருந்த சன்னம் அடுப்பில் வெடித்தது!

### இரு சகோதரிகள் காயம்!!

பனஞ்சிராய்களைக் கொண்டு அடுப்பு எரித்த பொழுது திடீரென்று பெரும் சத்தத்துடன் அடுப்பு வெடித்தது. அதனால் அடுப்படியில் இருந்த இரு சகோதரிகள் காயமுற்றனர்.

சத்தத்துடன் வெடித்த பொருள் ''கலிபர்'' சன்னம் என்பது அது சிதறிய போது தெரியவந்தது!

சுழிபுரம் கம்பனை அம்மன் கோயிலுக்குச் சமீபமாகவுள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் (வெள்ளி) இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

பனஞ் சிராய்க்குள் சிக்கிச் செருகுண்டிருந்த ''கலிபர்'' சன்னம் வெப்பம் காரணமாக வெடித்துள்ளது.

இச்சம்பவத்தில் கிருஷ்ணன் புஸ்பலீலா (வயது20), கிருஷ்ணன் புஸ்பதேவி(வயது15) ஆகிய சகோதரிகளே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மூளாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

கடந்த மாத இறுதியில் காரைநகர், ஊர்காவற்றுறை பகுதிகளில் பலாலியிலிருந்து

(3ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொருள்களே இதுவரையில் விற்பனை?

### உண்மை நிலையைத் தெளிவுபடுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 9
யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அத்தியாவசிய சேவைகள் நாயகத்தின் அனுசரணையுடன் கப்பல்மூலம் அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் நிவாரணமாக அனுப்பப்படுகிறதா அல்லது பணத்துக்கு விநியோகிக்குமாறு அனுப்பப்படுகிறதா என்ற கேள்வி இப்போது பரவலாக எழுப்பப்படுகிறது.

இந்தக் கேள்விக்கு யாழ். செயலக உயர் அதிகாரிகள் தக்க பதில் தர வேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதேவேளை கொழும்பிலிருந்து நிவாரணமாக விநியோகிப்பதற்காக வழங்கப்படும் பொருள்களை யாழ். அரச உயர் அதிகாரிகள் தங்களுக்குப் பணத்துக்குக் கட்டி

[ 3ஆம் பக்கம் பார்க்க]

## துரிதப்படுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 9
யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள உணவுப் பொருள் புதிய பங்கீட்டு முறை சம்பந்தமான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

உதவி அரச அதிபர்கள், கிராமசேவையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட நேற்றைய கூட்டத்தில் இவ்வாறு

(3ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் கடற்பகுதியில் கடற்படை பீரங்கிப் படகு!

சிறிலங்கா கடற்படையினரின் சிறிய பீரங்கிப் படகு ஒன்று நேற்று மாலை மண்டைதீவு முனைப் பகுதியிலிருந்து முன்னேறி குருநகர்ப் பகுதிக்கு அண்மையாக - சிறுத்தீவுக்கு அருகில் - நிலை கொண்டிருந்தது.

இதனால் குருநகர் மற்றும் அதனை அண்டியபகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (உ)

## கல்லாறு பகுதியில் கைதான 10 பேர் சுட்டுக் கொலை

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லாறுப் பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கு பத்து பொதுமக்களைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும் —

அம்பாறை மாவட்டம் நீலாவணைக்குக் கொண்டு செல்லப்பட்ட இந்தப் பத்துப் பேரும் அங்கு வைத்துப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் —

விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. (உ)

## புதிய பங்கீட்டு முறை அமுல் தாமதம் அடைவது ஏன்?

யாழ்ப்பாணம், செப். 9
யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு தற்போது வந்து சேர்ந்துள்ள உணவுப் பொருள்கள், அரச அதிபரின் உத்தியோகபூர்வமான அறிவிப்பு வந்ததும், உடனடியாக புதிய பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படும்.

புதிய பங்கீட்டு முறை குறித்து இதுவரைஉத்தியோகபூர்வமான அறிவித்தல் கிடைக்காததன் காரணமாகவே பங்கீட்டு உணவுப் பொருள் விநியோகத்தை வியாழக்கிழமை உடனடியாக ஆரம்பிக்க முடியவில்லை.

ப. நோ. கூ. சங்க உயரதிகாரி ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

கப்பல்கள் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த உணவுப் பொருள்களில் 60 வீதத்திற்கு மேற்பட்டவை கொண்டு வரப்பட்டுவிட்டதாகவும் மிகுதியானவற்றையும் கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

உதவி அரசாங்க அதிபர்களால் 'பெர்மிட்' வழங்கப்படுவது பூர்த்தியாகிவிடும் பட்சத்தில், எதிர்வரும் திங்கட்கிழமையளவில் விநியோகம்ஆரம்பமாகலாம் என்ற சாத்தியம் பற்றியும் அவர் குறிப்பிட்டார். (ஒ-6-5)

## தன்னாமுனையில் தாக்குதல்; மூன்று சிப்பாய்கள் மரணம்

யாழ்ப்பாணம், செப்.9
நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னாமுனையில்இருந்து ஏறாவூர் நோக்கிச்சென்று கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ரி-56 ரக துப்பாக்கிகள்-2, ரவைக்கூடு-8, ரவைகள்-240 பைனேட்கத்தி-1 ஆகியவை இந்தத் தாக்குதலின் போது தங்களால் மீட்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## இரவுக் குண்டு வீச்சினால் யாழ். நகரம் அதிர்ந்தது!

யாழ்ப்பாணம், செப். 9
நேற்றிரவு 10.15 மணியளவில் யாழ் நகருக்கு வந்த ''அவ்ரோ'' விமானம் ஒன்று குண்டுவீச்சை நடத்தியது.

பெரும் இரைச்சலுடன் பறந்த அந்தவிமானம் திடீர், திடீரென குண்டுகளை வீசித் தள்ளியது.

குண்டுவீச்சினால் யாழ் நகரமே அதிர்ந்தது. வீடுகள், கட்டடங்கள் குலுங்கி நடுங்கின.

நித்திரையில் ஆழ்ந்திருந்த மக்கள் பெரும் பதற்றமடைந்து, பதுங்கு குழிகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

குண்டுகள் சனசஞ்சாரமற்ற யாழ் நகரப் பகுதியிலேயே வீழ்ந்து வெடித்தன.

குண்டுவீச்சினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை யாழ் நகரப் பகுதியில் இரவு 8.15 மணியளவில் ''பரா'' வெளிச்சக்குண்டு ஒன்றும் ஏவிவிடப்பட்டது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்


**கோழித்தீன்**

எம்மிடம் தரமான கோழித் தீன் வகைகள் செய்து கொடுக்கப்படும் சிவாமில் அன் இன்டஸ்றீஸ், 46/1, பிறவுண்வீதி, 4ஆம்ஒழுங்கை, யாழ்ப்பாணம். (14159)

**RATHY WATCH WORKS**

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உப தபால் நிலைய அருகாமையில் பிடாரி சோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

**இடமாற்றம்**

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

**டவர் வோச் வேக்ஸ்**

எமது ஸ்தாபனத்தாரிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருட்களை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். தவறின் பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதனை அறியத் தருகின்றோம். தொடர்பு: கோபாலகிருஷ்ணன். 234/4, மானிப்பாய் வீதி, சென் செபஸ்தியார் லேன், (ஓட்டுமடம் சந்திக்கருகாமை)யாழ்ப்பாணம். (இதுவே இறுதி அறிவித்தலாகும்) (14156)

**டில்கா வாச் வேக்ஸ்**

சகல எலெக்ரொனிக் முதல் எந்த வகையான கடிகாரங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை (கிராமசபைக்கு அருகாமை) [14129]

**Dilka Watch Works**

யாழ். நகரில் சகல கடிகாரங்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் வேக்ஸ், மானிப்பாய் வீதி. ஆனைக் கோட்டை. (கிராமசபைக்கு அருகாமை) [14158]


**தவறிவிட்டது**

கணேசன் இராமச்சந்திரன் அடையாளஅட்டை கல்வியன் காட்டில் தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து ம. கணேஸ், 72,செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (13947)

## உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்து இளாலியிலுள்ள தேவாலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு மிருசுவில் பங்குத்தந்தை வண. பிதா லோரன்ஸ் சேவியர் அடிகள் வாராந்தம் உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருகிறார். [-இ117]


## மனித முன்னேற்ற நடு நிலையம் தீவுப்பகுதி அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப். 9

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை யாழ். ஆயர் இல்லத்தின் மனிதமுன்னேற்ற நடுநிலையம் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் இந்த பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன என்று நிலையத்தின் பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-5)

## ஓராண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்:
20 01 1934

ஆண்டவன் அடியில்:
09-09-1989

### திரு. சுந்தரம் கிருஷ்ணபிள்ளை

(அக்கராயன்குளம்-கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், விக்கின விநாயகர் ஆலய பொருளாளர், யூனியன் குளம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத் தலைவர், அரச கட்டட ஒப்பந்தக்காரர்)

யாழ். வல்வெட்டித்துறை, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், கிளி/அக்கராயன் குளத்தை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்தவருமாகிய, என் தந்தையின், (29-08-90) முதலாம் ஆண்டு திவசம் 10, கடற்கரை வீதி ஈச்சமோட்டையில் உள்ள எனது இல்லத்தில் நடைபெற்ற பொழுது பங்கு பற்றிய அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில்
என்றுமே அகலாது''

மனைவி – சிரங்கம்,
மகன் – தியாகராசா,
மருமகள்– பேரப்பிள்ளைகள்.

இல. 10, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். [13943]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருவாளர் கணபதி தியாகேசு

(காங்கேசன் சீமெந்துக்கூட்டுத்தாபன மூதயஊழியரும், மின்னியற்பகுதி உயர் உத்தியோகஸ்தருமாவார்)

மலர்வு: 07 – 01 – 1931
உதிர்வு: 31 – 08 – 1988

எம் உயிருக்கும் மேலான அன்புத் தந்தையே! வருடங்கள் இரண்டு உருண்டோடி விட்டன. ஆனாலும் உங்களின் பிரிவெனும் துயர்தனில் இருந்து நாங்கள் இன்னும் விடுபட முடியாமல் தவிக்கின்றோம்.

எம் அருமைத் தந்தையே! தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்:
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.
உற்றார், உறவினர்.

இமையாணன்:
ஆதியாமலை, உடுப்பிட்டி. (14160)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
20 – 04 – 1919

மறைவு:
31 – 07 – 1990

### இளையதம்பி ஈஸ்வரபாதம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்கள் நல்வாழ்வின் வழிகாட்டியாய்
உங்கள் உடல் பொருள் ஆவிஈந்த
உங்கள் உத்தமத்தை உன்னுகிறோம்

எங்ஙனம் நாம் மறப்போம்
எப்போது ஆறுதல் கொள்வோம்
நம்கடம்பன் தாள் அடைந்து
நற்பேறு பெற்றுய்ய இறைஞ்சுகிறோம்

மனைவி, பிள்ளைகள்.

நந்தாவில், கொக்குவில்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
13 – 01 – 1926

மறைவு:
21 – 08 – 1989

திதி:
09 - 09 - 1990

### திரு. முருகர் சின்னத்துரை

(ஓய்வுபெற்ற அரசாங்க எழுதுவினைஞர், கல்வித் திணைக்களம்)

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

மனைவி, மகள்,
உறவினர், நண்பர்கள்.

பூமாஞ்சோலை,
அல்வாய் மேற்கு,
அல்வாய். (சி-5188)

## ஓராண்டு நினைவஞ்சலி



உதிப்பு:
08 – 09 – 1969

அழிப்பு:
21 – 08 – 1989

செல்வன்

### அருளானந்தம் சுதாகரன்

(க.பொ.த. உயர்தரம் ஹாட்லிக்கல்லூரி)

அன்புச் சுதாவே! அருமைச் செல்வமே! மாணவமணியே! மாசிலாக் குணக் கொழுந்தே! ஏழைக்கினியனே! எவ் உயிர்க்கும் தீங்கு செய்யாச் சீலனே! உன் நினைவலைகள் மோதிவர நெஞ்சிழந்து தவிக்கின்றோம் இப்புவியில். தூயவனே! உன்புனித ஆன்மா சாந்தியடையக் கண்ணீர் மலரினால் அஞ்சலி செலுத்தி இறைவனைப் பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா, அக்கா, தங்கை,
உடன்பிறவாச் சகோதரர்கள்.

திக்கம். (14003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிக்கப்" வாகனம் ஒன்றின் மூலம் தீவுப்பகுதிக்கு மருந்து வகைகள்

## வள்ளத்தில் ஏற்றி அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 9

யாழ் - செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களின் சேவையால் தீவுப்பகுதி வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் சென்றன.

தீவுப்பகுதிக்கு மருந்துவகைகள் அனுப்ப பாதுகாப்பு வழங்குமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் கொழும்பில் இருந்து பதில் கிடைக்கவில்லை.

இதனால், செஞ்சிலுவைச் சங்க யாழ்- கிளைத் தொண்டர்கள் பிக்கப் வாகனத்துடன் மருந்து வகைகளை விசேடமாக "பரல்" களை வள்ளத்துடன் இணைத்துக் கட்டி உருவாக்கப்பட்ட பாதையில் ஏற்றி அராலித்துறையின் மறு கரைக்குக் கொண்டு சென்று, மருந்து வகைகளை வேலணை வைத்தியசாலைக்கும், புங்குடுதீவு வைத்தியசாலைக்கும், அகதி முகாம்களுக்கும் வழங்கினார்கள். (இ-3-5)

## முல்லைத்தீவுக்கும்

யாழ்ப்பாணம், செப். 9

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அவசர மருந்து வகைகள் நேற்று அனுப்பப்பட்டன.

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலை, முள்ளியவளை அரசினர் மருந்தகம் உட்பட செஞ்சிலுவைச் சங்க வைத்திய நிலையங்களிலும் மருந்துத்தட்டுப்பாடு நிலவி வந்தது.

இதைத் தொடர்ந்து மருந்து வகைகளை எடுத்துச் செல்ல வைத்திய குழு ஒன்று அங்கிருந்து வந்தது. யாழ். செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் மருந்துவகைகள் நேற்று முல்லைத்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இவர்களுடன் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரியும் செல்ல இருந்தார். இறுதி நேரத்தில் அந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. [இ-3)

# சந்தை மாற்றப்பட்ட போதிலும் யாழ். வியாபாரிகள் கொள்வனவு

யாழ்ப்பாணம், செப். 9

வவுனியா பூந்தோட்டச் சந்தை நகரப்பகுதிக்கு இடமாற்றப்பட்ட போதிலும் அங்கு யாழ்ப்பாண வியாபாரிகள் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்கிறார்கள்.

நகருக்கு வெளியே பூந்தோட்டக் குளப் பகுதியில் இயங்கி வந்த சந்தை நகரப் பகுதியிலுள்ள கோவில் குளத்துக்கு இடம் மாற்றப்பட்டது தெரிந்ததே.

தற்சமயம் யாழ்ப்பாண வியாபாரிகள் தமது அடையாள அட்டையை இராணுவ சென்றியில் சமர்ப்பித்து, உள் சென்று பொருள்களை கொள்வனவு செய்து வருகிறார்கள்.

கொழும்புச் சந்தை விலைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இங்கிருந்து செல்லும் பெரும்பாலனவர்கள் மிளகாய் வெங்காயம், திராட்சைப் பழம், பீற்றாட் ஆகியவற்றைக் கொடுத்து பொருள்களை வாங்கி வருகிறார்கள்.

இப்போது பொருள்கள் கூடுதலாக வருவதால் பொருள்களின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. [இ-6-3]

## அகதி முகாமுக்கு உதவி

நவாலி, செப். 9

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையில் தங்கி உள்ள வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 30 குடும்பங்களைச் சேர்ந்த 210பேரை ஆனைக்கோட்டை இந்து இளைஞர் கழகமும் ஆனைக்கோட்டை மகாஜனா சனசமூக நிலையமும் இணைந்து பராமரித்து வருகின்றன.

இம் முகாமுக்கு சர்வோதயத்தினால் வழங்கப்பட்டு வந்த உதவிகள் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் ஆனைக்கோட்டை கிராம மக்கள் அரிசி, தேங்காய், மா, உடு புடவை முதலியவற்றை அன்பளிப்பு செய்து வருகின்றனர்.

மேலும் மானிப்பாய் சென் ஜோன்ஸ் இன்ரக்ட்கிளப் மருந்து வகைகளையும், தென்றல் உடு புடவைகளையும், நவாலி வை. எம். சி. ஏ. மெதடிஸ்த திருச்சபை மூலம் மா, லக்ஸ்பிறே, தீப்பெட்டி, மெழுகுதிரி, சோயா பீன்ஸ் முதலியவற்றையும், தென்இந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனம் திறீபோசா, பருப்பு, அரிசி முதலியவற்றையும் அண்மையில் அன்பளிப்புச் செய்தன. (இ-100)

## ஜீ.சீ.ஈ. [சாதாரண] பரீட்சை:

# தனிப்பட்டோருக்கு முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை!

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மாவட்டத்தில் ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரலில் இப்பரீட்சை நடந்தது. ஜூலையில் முடிவுகள் வெளியாகின. யாழ் மாவட்ட பாடசாலைகளிலிருந்து தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் செஞ்சிலுவை சங்கம் மூலமாக இங்கு அனுப்பிவைக்கப்பட்டன.

ஆனால் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இன்றுவரை எவருக்கும் கிடைக்கவில்லை.

பரீட்சை முடிவுகள் வெளியானபின், மூன்று தடவைகள் கொழும்பிலிருந்து கப்பல்கள் மூலம் வடபகுதிக்கு தபால் பொதிகள் வந்து சேர்ந்துள்ளன.

ஆனால் அவற்றில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சை பெறுபேறுகள் சேர்க்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5-3)

## பெல்ஜியம் செஞ்சிலுவை அதிகாரி சொல்கிறார்:

# இன்னல்படும் தமிழருக்கு வழங்கிய உதவி நேரடியாக கிடைக்கவில்லை

## இங்கு வந்த பின்பே அது தெரிய வந்தது

யாழ்ப்பாணம், செப். 9

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இன்னல்படும் மக்களுக்கு அவசர உதவிகள் வழங்க 2 கோடி 60 லட்சம் ரூபாவை வழங்கினோம். அந்த உதவிகள் இங்குள்ளவர்களுக்கு நேரடியாகக் கிடைக்கவில்லை என்பதை இங்கு வந்தபின்பே உணரமுடிகிறது.

இப்படிக் கூறினார் பெல்ஜியம் செஞ்சிலுவைச்சங்க அதிகாரி செல்வி அல்ஸ்.

கடந்த வியாழனன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அவர் உதயன் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

எமது செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கையில் மேலும் கூறியதாவது:-

வெளிநாட்டவர்கள் இங்கு வர இலங்கை அரசு தடை விதித்துள்ள போதும், கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சியால் நான் இங்கு வர முடிந்தது.

இங்கு வந்த பின்பு தான் இங்குள்ள உண்மை நிலையை உணர முடிந்தது. பெரும் இன்னல்களுக்கு மத்தியில் மக்கள்வாழ்வதை உணர முடிந்தது.

ஐரோப்பிய சமூக அமைப்பின் கீழ் உள்ள நாடுகளில் வாழும் தமிழர்களும், வெளிநாட்டவர்களும் இலங்கையில் நடக்கும் சம்பவங்களின் உண்மை நிலை பற்றி எம்மிடம் கேட்டனர். உண்மை நிலை பற்றி அறிந்து சென்று அவர்களுக்கு விளக்குவதற்காகவே நான் இங்கு வந்தேன். இங்குள்ள நிலைமையை அவர்களுக்கு விவரமாக எடுத்துக் கூறுவேன். அவர்கள் மூலம் நிதி சேகரித்து இன்னல்படும் மக்களுக்கு உடனடியாக அனுப்புவேன்.

இப்படி அவர் கூறினார். (இ-7-3)

# தமிழ் கிராம பாதுகா... விரைவில் ஊர்காவல் ...

கொழும்பு, செப். 9

தமிழ்க் கிராமங்களைப் பாதுகாக்க ஊர்காவல் படை அமைக்கப்படவுள்ளது. இதற்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியில் தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்து ஆலோசனை நடத்திவருகிறார். இந்த ஆலோசனைகளில் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழவர் ஜனநாயக முன்னணி ஆகியன சம்பந்தப்படவில்லை என்று அறியப்படுகிறது.

ஊர்காவற் படைக்கு நிய[மி]க்கப்படவிருப்பவரின் பட்டியலை அவர் கோரியுள்ளார்.

தெரிவுசெய்யப்படுபவர்களை உடன் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த அரசு விரும்புவதாக சிறில் ரணதுங்கா அந்தக் கட்சிகளிடம் தெரிவித்துள்ளார் [இ-3]

## இந்து மதகுருமாருக்கு ஓய்வூதியம்

கொழும்பு, செப். 9

இந்து மதகுருமாருக்கு ஓய்வூதியம் வழங்க வழி செய்யும் திட்டம் ஒன்று இந்து சமய விவகார அமைச்சின் பரிசீலனையில் இருக்கிறது.

துணை அமைச்சர் பி. பி. தேவராஜ் இத்தகவலை வெளியிட்டார். (இ-எ)

## கோப்பாய் பாலத்தில்

கோப்பாய். செப். 9

பலாலியில் இருந்து மண்டைதீவுக்கு செல்லும் ஹெலிகள் கோப்பாய் - கைதடி பால வெளியில் தாழப் பதிந்து அப்பகுதியால் செல்வோரை பயமுறுத்தி வருவதுடன் இடையிடையே வேட்டுக்களையும் தீர்க்கின்றன. (இ-72)

## திருட்டு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டன. கடந்த செவ்வாய் இரவு இச் சம்பவம் இடம் பெற்றது. (இ-7)

# பெரும்போக நெற்செய்கை குடாநாட்டில் பாதிப்பு

பண்டத்தரிப்பு, செப். 9

இப்போது ஆவணி மாதம் குடா நாட்டில், வருடாந்த (பெரும் போக) நெற்செய்கைக்காக வயல்கள் உழுது பண்படுத்தப்படும் காலம்.

வழமையாக இப்பகுதிகளில் வயல் உழவு இக் காலத்தில் ஆரம்பமாகி விடுவதுண்டு ஆனால் இம் முறை இன்னும் பெரும்பாலானோர் உழவு வலைகளைத் தொடங்கவில்லை.

எரிபொருள் கிடைக்காமைபால் இயந்திர உழவை நினைத்தும் பார்க்க முடியவில்லை. மாட்டுழவுக் கூலியும் அதிகரித்து விட்டது.

இயந்திர உழவு இல்லாததால் எருதுகளுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி ஒரு புறமும். அவற்றுக்கான தீனிகளின் விலை உயர்வு ஒரு புறமுமாக மாட்டுழவுக்கான கூலியை பரப்புக்கு ஐம்பது ரூபாவுக்கு மேல் உயர்த்திவிட்டது!

இந்தக்காரணங்களினாலேயே வயல் உழவு வேலைகள் மந்த நிலையில் காணப்படுகின்றன. (அ-120)

## சர்வோதய அதிகாரி விடுதலை

குருநகர், செப். 9

ஸ்ரீலங்கா இராணுவத்தால் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட யாழ். சர்வோதய வெளிக்கள அதிகாரி திரு. கே. சிவசுப்பிரமணியம் நேற்று சைக்கிளில் யாழ் வந்து சேர்ந்தார்.

12 தினங்கள் இவர் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். [இ-51]

## நிவாரணப் பொருள்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அடிக்கிறார்களா என்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் கேட்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாகவே இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் அனேக மக்கள் தொழில் இழந்தும், பணப்புழக்கம் இல்லாததாலும் கஷ்டப்படுவதால் கப்பலில் வரும் பொருள்களை எல்லோருக்கும் இலவசமாக வழங்கினால் என்ன என்று மக்களில்அனேகர் கேட்கிறார்கள்.

வடக்கு- கிழக்கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உணவையும் மற்றும் அத்தியாவசிய சேவைகளையும் வழங்க அரசு நாளாந்தம் மூன்று கோடி ரூபா செலவிடுவதாக அமைச்சர் ரஞ்சன் கூறியிருக்கிறார்.

அதன் அர்த்தம் அத்தியாவசிய சேவைகள் நாயகம் அனுப்பும் பொருள்கள் நிவாரணம் தானே என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

இவற்றுக்கெல்லாம் உச்சிப்பூ வைத்தது போல வடமராட்சி ப. நோ. கூ. சங்க ஒன்றிய உறுப்பினர் கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகள் மீது கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் திரு. சி கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிரஸ்தாப தீர்மானம் வருமாறு:-

" பாவனையாளர்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு கொடுத்த பொருள்களை இலவசமாக விநியோகிக்கத் தவறியமைக்காக சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக மேற்படி ஒன்றியம் கண்டனம் தெரிவிப்பதுடன் அல்லலுறும் பாவனையாளர்கள் சார்பாக ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கிறது"-என்று கூறப்பட்டுள்ளது. (அ)

## விறகிலிருந்த.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துருப்புக்களை தரை இறக்கி விட்டுச் சென்ற ஹெலிகள் பொன்னாலை, மூளாய், சுழிபுரம், பண்டத்தரிப்பு பகுதிகளில் ஒவ்வொரு முறையும் "கலிபர்" தாக்குதலை நடத்தி விட்டே சென்றன.

அப்படி ஒரு தாக்குதலின் போது சன்னம் பனை மரத்தில் சிக்கி இருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஒ)

## துரிதப்படுத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முடிவு செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தக் கலந்துரையாடலில் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் உரையாற்றினர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை நோக்கி ஷெல்

யாழ்ப்பாணம், செப். 9

மண்டைதீவுப் பகுதியில் இருந்து வேலணையை நோக்கி கடந்த வியாழக்கிழமை இரவு 9.30 மணிக்கு ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு அருகிலும் ஷெல் விழுந்து வெடித்தது. (இ-3-7)

## அதிகாரப் பரவலாக்கல்

# மாத முடிவுக்குள் கட்சிகள் இணக்கம் காணவேண்டும்

கொழும்பு, செப். 9

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விஷயங்களில்இம்மாத முடிவுக்குள் அனைத்து அரசியல் கட்சிகளும் கருத்து உடன்பாடு ஒன்றைக் கண்டுவிட வேண்டும்.

இப்படி ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது.

அதிகாரப்பரவலாக்கல் பற்றி மேலும் ஆலோசனைகள் எதிர்வரும் 14 திகதி மீண்டும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.(இ-எ)

# வேலணை உ.அ.அ.பிரிவில் ஐந்து அகதி முகாம்கள்

யாழ்ப்பாணம், செப். 9

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐந்து இடங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களில் 1, 923 குடும்பங்கள் தங்கியுள்ளன.

மண்கும்பான் சிவகாமி அம்மன் கோவிலில் 500 குடும்பங்களும், மண்கும்பான் மகா வித்தியாலயத்தில் 449 குடும்பங்களும், மண்கும்பான் பெரிய பள்ளிவாசலில் 748 குடும்பங்களும், பாபா பள்ளிவாசலில் 203 குடும்பங்களும், சாட்டி மாதா கோவிலில் 23 குடும்பங்களும் தங்கியுள்ளன.

இவர்களுக்கு ஒருவார நிவாரணம் வழங்க உதவி அரசாங்க அதிபர் திரு. என். தனபாலசிங்கம் அனுமதி வழங்கியுள்ளார். (இ-3-7)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை பாலகிருஷ்ணப் பத்தர்

தெல்லிப்பழை கிழக்கு தெல்லிப்பழையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பாலகிருஷ்ணப் பத்தர் நேற்று [08-09 90] காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் [சவூதி], சிவபாலன், சரோஜினிதேவி, வசந்தாதேவி, விமலாதேவி, சகுந்தலா, சியாமளாதேவி என்பவரின் அன்புக்குரிய தகப்பனாரும், சிவாஜினி, லோகினி, சுதர்ஜினி, அசோக் என்பவரின் பாட்டனாரும், முருகதாஸ், கதிர்காமநாதன், சண்முகராஜா என்பவரின் மாமனாரும் ஆவார்.

இன்று தெல்லிப்பழை கொத்தியால் மயானத்தில் 2 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
மருமகன் சண்முகராஜா

தெல்லிப்பழை. [14163]

## திருமதி குஞ்சாச்சிப்பிள்ளை அம்பலவாணர்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 261/6, கண்டி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குஞ்சாச்சிப்பிள்ளை அம்பலவாணர் 08 09-90 இல் காலமானார்.

அன்னார் அம்பலவாணரின் [மன்னார் ஸ்ரோர்ஸ், மன்னார்] அன்பு மனைவியும், தர்மகுலசிங்கம் [அவுஸ்திரேலியா], திருமதி ஜெயராணி ஸ்ரீபத்மநாதன், திருமதி தேவகி சண்முகதாஸ், லீலாவதி [ஆசிரியை], குமாரகுலசிங்கம் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீபத்மநாதன் [முகாமையாளர், மக்கள் வங்கி, மன்னார்], சண்முகதாஸ் [குகன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி], திருமதி விஜிதா தர்மகுலசிங்கம் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமியாரும், அசாந்தி, சகிதுஷன், வசந்தி, காண்டீபன், லாவண்யா, துஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற நடராசா, வீரசிங்கம், மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-9-90 ஞாயிறு காலை 10 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
வ. ஐ. அம்பலவாணர்

261/6, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (14164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# திருநாவுக்கரசு கோஷ்டியுடன் பண்ருட்டி அணி

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமையிலான அ. தி. மு. க. நேற்று முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு. க. வுடன் இணைந்தது.

இணைந்த அ.தி.மு.க.வின் தலைவராக பண்ருட்டி இராமச்சந்திரன் நியமிக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர்களையும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலகத்தில் நடைபெறும் கூட்டம் ஒன்றுக்கு சமுகம் தரும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

## ஆஸ்பத்திரி.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னரே போதனா வைத்தியசாலையை அங்கு மாற்ற முடியும்; மாற்ற வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு ஆகஸ்ட் மாதச் சம்பளம் இதுவரை வழங்கப்படாமல் இருப்பது குறித்தும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. (அ-15)

## தீவுப்பகுதியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மடைந்துள்ளனர்.

கடந்தமாதம் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதிவரை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை பலநோக்குக் கூ. சங்கங்களின் உணவுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்கள்மீது மேற்கொள்ளப் தாக்குதலினால் பல லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் நாசமாகின.

தீவுப்பகுதியிலுள்ள 80 ஆயிரம் அகதிகளுக்கும் ஒருவாரத்துக்கு 1,700 மூடை அரிசியும், ஆயிரம்மூடை மாவும், 480 மூடை சீனியும், பத்துஆயிரம் பக்கெட் பால்மாவும் தேவை எனக் கணக்கிடப்பட்டிருந்தது.

இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்க முன்பே அங்குஉணவுப் பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவியது.

இராணுவ நடவடிக்கையின் போது —

வேலணை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கமொத்தவிற்பனை நிலையம், மண்டைதீவில் உள்ள இருகிளைகள், அல்லைப்பிட்டிக் கிளை, மண்கும்பான் கிளைகள், சரவணைக் கிளை, சிற்பனைக்கிளை ஆகியவற்றிலும் ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புளியங்கூடல் களஞ்சியம், முதலாம், ஆறாம் இலக்கக் கிளைகள் ஆகியவற்றில் இருந்த உணவுப்பொருள்களும், தெற்கு அராலியில் இரண்டு டிராக்டர்களில் இருந்த 150 மூடை மாவும் நாசமாக்கப்பட்டன.

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனை நிலையம், மக்கள்கடை ஆகியவற்றில் இருந்த உணவுப் பொருள்களும் நாசமாகின.

இதனால் அங்கு உணவுப் பற்றாக்குறைநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதிக்குப் பின்பு அங்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.

உதவி அரசாங்க அதிபர் திரு. என். தனபாலசிங்கம் உணவுப்பொருள் நிவாரணம் வழங்க பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு 'பெர்மிட்' விநியோகித்துள்ள போதிலும் பொருள்கள் இல்லாத நிலையில் வழங்கமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-7)

# இராமங்களில் பலருக்கு காலை உணவு பனம்பழம்!

யாழ்ப்பாணம், செப். 9

கிராமப் பகுதிகளில் இப்போது பனம்பழம் நாளாந்தக் காலை உணவாக மாறிவருகிறது.

அதனால் பனம்வளவுகளில் திருட்டுகள் மலிந்து விட்டன. பனந்தோப்புச் சொந்தக்காரர்கள் பலர் அதிகாலையில் போய்க் காவல் இருக்க வேண்டிய நிலையும் உருவாகி உள்ளது.

நாளாந்தம் உழைத்து வாழ்க்கை நடத்துவோருக்கு இப்போது தொழில் இல்லை. அதனால் வருமானம் கிடையாது. கடன்படவும் முடியாது, உணவுப் பொருள்கள் உச்சவிலைகளில் விற்பனையாவதால் சாதாரண தொழிலாளர்களால், தொழில் இல்லாதவர்களால், அவற்றை நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அதனால் பொழுது விடியு முன்னரே பலரும் பனந்தோப்புகளுக்குச் சென்று பனம்பழங்களைப் பொறுக்கின்றனர். அதுவே அவர்களது காலை உணவாகிறது.

வேறு சிலர் பனம்பழங்களைப் பொறுக்கிப் பனாட்டு ஆக்குகிறார்கள். இன்னும் சிலர் அவற்றை வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்று, ஏனைய உணவுப் பொருள்களை வாங்கலாம் என நினைத்து, அவ்வாறே செய்கிறார்கள்.

இவற்றால் கிராமப் பகுதிகளில் பனம்பழத்திருட்டு அதிகரித்து விட்டது.

## சங்கக் கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 9

பாஷையூர், துண்டிச் சந்தியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த அரிசி, மா, சீனி, பால் மா போன்ற உணவுப் பொருள்கள் களவாடப்பட்டதாகத் தலைமைச் சங்கத்தில் முறையிடப் பட்டுள்ளது. [இ-5-6]

## வரவேற்புபசார அழைப்பு

ஆவணி மாதம் 22ஆம் திகதி வெள்ளியன்று (07 - 09 - 90) வண்ணார் பண்ணை மஹா கணபதீஸ்வரக் குருக்கள் பாஸ்கர சர்மா அவர்கட்கும், நவிண்டில் இரத்தின சபாபதிக் குருக்கள் காஞ்சனா அவர்கட்கும் நடைபெற்ற திருமண வைபவத்தின் போது வருகை தந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

மணமகன் இல்லத்தில் ஆவணி 25 திங்களன்று (10 - 09 - 90) மாலை நான்கு மணியளவில் நடைபெறும் வரவேற்புபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சொ. இரத்தினசபாபதிக் குருக்கள்

குளவியடி அம்மன் கோவில்,
நவிண்டில். [14162]

# மரண அறிவித்தல்

## திருமதி அமிர்தவல்லி சின்னையா [அமுதம்மா]

வட்டு-கிழக்கு சித்தங்கேணியில் வசித்தவரும், தற்பொழுது உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் வாழ்ந்தவருமாகிய சின்னையா அமிர்தவல்லி நேற்று சிவபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற நிலஅளவையாளர் மூத்ததம்பி சின்னையாவின் அன்பு மனைவியும்; இரத்தினசிங்கம் [மலேஷியா), சிவப்பிரகாசபிள்ளை [குண்டுமணி மாஸ்டர்] ஆகியோரின் அன்புத் தாயாரும்; சகுந்தலாதேவி [மலேஷியா], அங்கயற்கண்ணி அம்மா [இராமநாதன் கல்லூரி இணை உப அதிபர்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-9-90) மாலை 2.00 மணிக்கு மருதனாமட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

''வாய்மை அகம்''
கே.கே.எஸ். வீதி,
மருதனாமடம்,
சுன்னாகம்.

தகவல்:
C. S. S. கரன்
(பேரன்)
(13948)

## கணபதிப்பிள்ளை பரமசாமி

காரைநகர் பலகாடு பிறப்பிடமாகக் கொண்டவரும் வேம்படியில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை பரமசாமி காலமானார்.

அன்னார் காலம் சென்ற கணபதிப்பிள்ளை, தங்கமுத்துவின் அன்பு மகனும், செல்லமுத்துவின் அன்புக் கணவரும், செல்வராணி, யோகராணி, அன்பழகன், குகதாசன், புஸ்பராணி, வாமதேவன், நந்தகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும், யாழ். வர்த்தகர் ஆ.க. கனகசபாபதி, காலம் சென்ற கனகம்மா, இலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரரும், அம்பலவாணர் பரமசாமி, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 9-9-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் சாம்பலோடையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பலகாடு
காரைநகர்.

தகவல்:
ப. அன்பழகன்
(13949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org